**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 12.02.2026**
**OS. No. 09/2024**
**வழக்கு சாட்சி PW.1– கந்தசாமி, த/பெ.குட்டிபூசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்து எங்களுடைய பூர்வீக சொத்தாகும். அதை என் மகன் 1ம் பிரதிவாதி மற்றும் என் பங்காளிகள் என் தந்தையை அடித்து அவர்கள் பெயரில் எழுதி வாங்கிகொண்டார்கள். அதை ரத்து செய்யும்படியும், தாவா சொத்தில் எனக்குள்ள பங்கை பிரித்து தர கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை குட்டிபூசாரிக்கு நானும், என் தம்பி வைரகவுண்டன், என் சகோதரிகள் பஞ்சாயி, லட்சுமி, பெருமாயி, பெரியபிள்ளை, குழந்தைபிள்ளை ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். தாவாசொத்துக்கள் என் தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து ஆகும். பூர்விக சொத்து என்பதால் என்னுடன் பிறந்த சகோதரிகளும் பாகபிரிவினை வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2) எனக்கு பழனிசாமி, சம்பத், வெங்கடாஜலம், திருமலைராஜன், பஞ்சப்பன், ராமாயி, குருவாயி என மொத்தம் 7 பிள்ளைகள் உள்ளனர். பூர்வீக சொத்து என்பதால் என்னுடைய பிள்ளைகளும் பாகபிரிவினை வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தந்தைக்கு மொத்தம் 80 சென்ட் நிலம் பூர்வீகமாக பாத்தியப்பட்டுள்ளது. அதில் 20 சென்ட் நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளேன். மற்ற நிலங்களில் என் தம்பி வைரகவுண்டனுக்கு 50 சென்ட் நிலம் என் தந்தை கொடுத்துள்ளார். என் மகனும், என் பங்காளிகளும் என் தந்தையை மிரட்டி வெற்று தாளில் 23 சென்ட் நிலத்தை பொறுத்து கையொப்பம் வாங்கிகொண்டார்கள்.

3) நான் சொல்வது தவறு என்றும் என் தந்தை தான் 2013 ல் என் மகனின் பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 10.03.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.